ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீகமலவல்லி நாயகி ஸமேத ஸ்ரீஅழகியமணவாள பரப்ரஹ்மணே நம:




(உறையூர் "நம்நாச்சியார்" கமலவல்லி)

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# ஸ்ரீலக்ஷ்மீ தந்த்ரம்

(ஐந்தாவது அத்யாயம் – ஐந்தாம் பகுதி)
இதற்கான ச்லோகம் மற்றும் பொருள் – தமிழில்

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீஅஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

5-61 ச்ரோத்ராதி பஞ்சகம் த்வேதத்யாத்மம பரீகீர்த்திதம்
ச்ரோத்ராதே: ஸாத்த்விகாத் ஸ்ருஷ்டிர் வியதாதித்யபேக்ஷயா

பொருள் - இவ்விதமாகக் கேட்கும் உறுப்பு முதலான ஐந்து ஞான இந்த்ரியங்களும் அத்யாத்மம் எனப்படும். கேட்கும் புலன் முதலான ஐந்தும் ஆகாயம் முதலான பூதங்களின் ஸாத்த்வீக குணத்தில் இருந்து வெளிப்படுவதாகும்.

5-62 தேந பௌதிகம் இதி உக்தம் க்ரமாச் ச்ரோத்ராதி பஞ்சகம்
வாசஸ்து விஷய: சப்தோ வசநம் ச க்ரியா மதா

பொருள் - இப்படியாக உள்ள கேட்கும் உறுப்பு போன்ற ஐந்தும் அந்தந்த பூதங்களைச் சேர்ந்ததாக உள்ளன. உதாரணமாக, பேசும் உறுப்பின் விஷயமாக ஒலி உள்ளது. பேசுதல் என்பது அந்த உறுப்பின் செயல்பாடாக உள்ளது.

5-63 ஹஸ்த இந்த்ரியஸ்ய சாதேயமாதாநம் ச க்ரியா மதா
பாத இந்த்ரியஸ்ய கந்தவ்யம் கமநம் ச க்ரியா மதா

பொருள் - பிடித்துக்கொள்ளுதல் என்ற விஷயத்துக்கு உட்பட்ட பொருள்கள் அனைத்தும் கரங்களுக்கு விஷயமாக உள்ளன. இதன் செயல்பாடு என்பது பிடித்துக்கொள்ளுதல் ஆகும். சென்றடையும் இடம் என்பது கால்களுக்கு விஷயமாக உள்ளது. நகர்தல் என்பது இதன் செயல்பாடாக உள்ளது.

5-64 உபஸ்தஸ்ய தத் ஆநந்த்யமாநந்தச்ச க்ரியா ததா
விஸ்ருஜ்யம் விஷய: பார்யோர் விஸர்கச்ச க்ரியா ததா

பொருள் - ஆனந்தம் அளிக்கும் அனைத்தும் ஆண் - பெண் குறிகளின் விஷயமாக உள்ளன. அனுபவித்தல் என்பதே இந்த உறுப்புக்களின் செயல்பாடாக உள்ளது. வெளியேற்றப்படும் கழிவு என்பது ஆசனவாயின் விஷயமாக உள்ளது. வெளியேற்றுதல் என்பதே அதன் செயலாக உள்ளது.

5-65 ஹஸ்தாதிகம் சதுஷ்கம் யத்தத் பஞ்ச விஷயாத்மகம்
அக்நி: இந்த்ரச்ச விஷ்ணுச்ச தைதவாத்ய: ப்ரஜாபதி:
5-66-1 மித்ரச்ச இதி க்ரமாஜ்ஞேயா ஆதிதேவா விசக்ஷணை:

பொருள் - கரங்கள் தொடக்கமாக உள்ள மற்ற நான்கு கர்ம இந்த்ரியங்களும் அவைகளின் ஐந்து விஷயங்களில் ஈடுபட்டபடியே உள்ளன. இவற்றின் அதிபதி தேவதைகளாக அக்னி (வாக்கு), இந்த்ரன் (கைகள்), விஷ்ணு (கால்கள்), ப்ரஜாபதி (மர்மக்குறி) மற்றும் மித்ரன் (ஆசனவாய்) ஆகியோர் உள்ளனர். இப்படியாகவே கற்றவர்கள் கூறுகின்றனர்.

5-66-2 சப்த: பஞ்சாத்மகம் ச ஏவ வாகாதேர் விஷயோ ஹி ய:
5-67 ஸ: ஆதி பூத இதி ப்ரோக்தோ வாகாத்யத்யாத்மம் உச்யதே
மநஸ்து ஸஹகார்ய அஸ்மிந் உபயத்ராபி பஞ்சகே

பொருள் - சப்தம் முதலான புலன் உறுப்புகளுக்கு விஷயமாக உள்ள ஐந்து பொருள்களும் ஆதிபூதம் எனப்படும். வாக்கு முதலான உறுப்புகள் அத்யாத்மம் எனப்படும். மனம் என்பது இந்த இரண்டு விதமான இந்த்ரியங்களுக்கும் (கர்ம மற்றும் ஞான) துணையாக உள்ளது.

5-68 ஞானேந்த்ரிய கணைச்ச ஏதத் விகல்பம் தநுதே மந:
விகல்போ விவிதா க்ல்ருப்திஸ்தச்ச ப்ரோக்தம் விசேஷணம்

பொருள் - ஞான இந்த்ரியங்களின் துணையுடன் மனமானது அனைத்து வஸ்துக்களின் தனித்தன்மைகளை அறிகிறது. விகல்பம் என்பது மனமானது எந்த ஒன்றின் மூலம் இவ்விதம் பிரித்து அறிகிறதோ அதுவே ஆகும். இத்தகைய தனித்தன்மை என்பது விசேஷணம் எனப்படுகிறது.

மற்றொரு பொருள் - (இதற்கு வேறு விதமாகவும் பொருள் கூறலாம்) ஞான இந்த்ரியங்களின் துணையுடன் மனம் பலவிதமான விகல்பங்களை அறிகிறது. விகல்பம் என்பது பலவிதமான கற்பனைகள் என்று கூறப்படும். இதன் மூலம் பொருள்களின் விசேஷமான தன்மைகளும் உற்பத்தி ஆகின்றன.

உதாரணம் – மேலே முதலில் கூறப்பட்டதை ஒர் உதாரணம் மூலம் காண்போம். வெண்மையாக பால், சுண்ணாம்பு, காகிதம் என்று பல உள்ளன. இதில் உண்ணக்கூடிய வஸ்து எதுவென்றால் பால் என்று மனம் அறிந்துகொள்கிறது. இதனை ஞான இந்த்ரியங்கள் மூலம் அறிகிறது. பால் என்று பிரித்து அறியப்பட்ட வஸ்து விகல்பம் என்று (பெயர்ச்சொல்லாக) கூறப்படுகிறது. பாலின் சுவை, மணம் போன்ற தனித்தன்மைகள் விசேஷணம் என்று கூறப்படுகின்றன.

5-69 தர்மேண ஸஹ ஸம்பந்தோ தர்மிணச்ச ஸ உச்யதே
விகல்ப: பஞ்சதா ஜ்ஞேயோ த்ரவ்ய கர்ம குணாதிபி:

பொருள் - விசேஷணம் என்பது விகல்பத்தின் ஒரு தன்மை என்றே கொள்ளப்படும். ஒரு பொருள், அந்தப் பொருளின் தன்மை ஆகிய இரண்டிற்கு இடையே உள்ள தொடர்பு என்பது விகல்பம் எனப்படும். இந்த விகல்பம் என்பது த்ரவ்யம், கர்மம், குணம் போன்றவற்றின் வேறுபாடுகள் கருதி ஐந்து வகைப்படும்.

விளக்கம் - தர்மம் என்பது ஒரு பொருளின் குணம் என்பதாகும். தர்மி என்பது அந்தக் குணம் கொண்ட வஸ்து ஆகும். இவை இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு என்பது விகல்பம் என்று கூறப்படுகிறது. இந்தத் தொடர்பானது செயல்பாடு குறித்து இருக்கலாம், குறிப்பட்ட குணம் குறித்து இருக்கலாம். இப்படி உள்ள விகல்பம் ஐந்து வகைப்படும்.